தினமணி

எமது செய்தியாளர்களை தொடர்புகொள்ள

| | |
|---|---|
| கோவை | 94425 04156 |
| மேட்டுப்பாளையம் | 94878 42563 |
| பெ.நா.பாளையம் | 98425 63953 |
| சூலூர் | 98422 44599 |
| அன்னூர் | 91502 49095 |
| பொள்ளாச்சி | 89034 44119 |
| மதுக்கரை | 73735 45727 |
| வடவள்ளி | 98436 52523 |
| வால்பாறை | 94863 24619 |

தினமணி

சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...

| | |
|---|---|
| கோயம்புத்தூர் | : 97902 12447 |
| மேட்டுப்பாளையம் & அன்னூர் | : 77088 26235 |
| சூலூர் | : 73730 55255 |
| மதுக்கரை | : 88701 48269 |
| பொள்ளாச்சி | : 90435 00177 |

உதவி மைய எண் : 88070 00216


## நெருங்கும் பேரவைத் தேர்தல்

# கோவையில் அதிநவீன பிரசார வாகனங்கள் வடிவமைப்புப் பணி தீவிரம்

-வெ.செல்வகுமார்-





கோவையில் பிரசார வாகன வடிவமைப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ள ஊழியர்கள். (வலது) அரசியல் தலைவர்களின் தேர்தல் பிரசாரத்துக்காக வடிவமைக்கப்பட்டுள்ள பிரத்யேக வாகனம். படங்கள்: சச்சின் துவாரகா.மு

**கோவை, பிப்.7:** சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கும் நிலையில் கோவையில் கணினி, பிரிண்டர், எல்இடி தொலைக்காட்சி உள்ளிட்ட அதிநவீன வசதிகளுடன் கூடிய சொகுசு பிரசார வாகனங்கள் வடிவமைப்புப் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் கூட்டணிப் பேச்சு வார்த்தை, தொகுதிப் பங்கீட்டில் கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. சுவர்களில் சின்னங்களை வரையும் பணி தொடங்கியுள்ளது. ஏப்ரலில் தேர்தல் நடத்தப்படலாம் என்ற எதிர்பார்ப்பில் பல்வேறு கட்சிகளும் களப் பணியில் தீவிரமாக உள்ளன. இந்நிலையில் கோவை, டாடாபாத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் தலைவர்களுக்கான பிரசார வாகனங்கள் தயாரிப்புப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. தேசியத் தலைவர்கள் முதல் தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் வரை அனைவருக்குமே தேர்தல் பிரசார வாகனம் தயார் செய்வதில் இந்நிறுவனம் முன்னோடியாகத் திகழ்கிறது.

பல்வேறு இடங்களில் வாகன வடிவமைப்புப் பணிகளில் நிறுவனங்கள் ஈடுபட்டு வந்தாலும் தலைவர்களுக்கான பிரசார வாகனங்கள் வடிவமைப்பு செய்வதில் கோவையில் உள்ள இந்த தனியார் நிறுவனம் முதலிடம் பிடித்துள்ளது. இதனால், பல்வேறு கட்சியினரும் தங்களுக்கான பிரசார வாகனங்களைத் தயாரிக்க இந்நிறுவனத்தை நாடுகின்றனர்.

### ஹைட்ராலிக் லிஃப்டிங் வசதி

இந்த நிறுவனமானது 50 ஆண்டுகளாக கோவையில் இயங்கி வருகிறது. தமிழகத் தலைவர்கள் மட்டுமின்றி, பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த தலைவர்களுக்கும், தேசியத் தலைவர்களுக்கும் இந்த நிறுவனம் பிரசார வாகனங்கள், பாதுகாப்பு வாகனங்களை வடிவமைத்துக் கொடுத்து வருகிறது. இந்த வாகனத்தில் தலைவர்களின் இருக்கைகள் சுழலும் வகையில் வடிவமைக்கப்படுகிறது. இருக்கையில் அமர்ந்து பிரசாரம் மேற்கொள்ளும் விதமாகவும், இருக்கையில் அமர்ந்தவாறு வாகனத்துக்குள் செல்லும் வகையிலும் நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

மேலும் தொண்டர்களிடையே பேசுவதற்காக தலைவர்களுக்கு 'ஹைட்ராலிக் லிஃப்டிங்' மற்றும் 'மேனுவல் லிஃப்டிங்' வசதியுடன் வாகனத்தின் நடுவே மேடையில் நின்று பேசுவதற்கு இந்த இரண்டு விதமான நவீன தொழில்நுட்பத்தில் வடிவமைக்கப்படுகிறது. லிஃப்டிங் வசதி பொருந்தாதவர்களுக்கு நகரும் படிக்கட்டு வசதி ஏற்படுத்தித் தரப்படுகிறது.

### நவீன தொழில்நுட்பத்துடன் ஒளி, ஒலி

பிரசாரத்தின்போது நீண்ட தொலைவு பயணங்களை மேற்கொள்ளும்போது தலைவர்கள் ஓய்வெடுக்க வசதியாக படுக்கை வசதி, முக்கிய நிர்வாகிகள் அமர்ந்து பேசக்கூடிய சோஃபா போன்ற அமைப்புடன் கூடிய இருக்கை வசதிகளும் வடிவமைக்கப்படுகிறது. அதேபோல தலைவர்கள் இருக்கையில் அமர்ந்து பயணம் செய்யும்போது தொண்டர்கள் பார்க்கும் வகையில் சிறப்பு ஒளி அமைப்புகள், தலைவர்கள் பேசுவதை துல்லியமாக கேட்கக்கூடிய நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஒலி அமைப்புகளும் பொருத்தப்படுகின்றன.

மேலும், தலைவர்களின் பாதுகாப்புக்கு வரக்கூடிய பாதுகாப்பு அதிகாரிகள், அவர்களின் பணிகளை சிறப்பாக மேற்கொள்ளும் விதமாக வாகனத்தை சுற்றிலும் கைப்பிடி வசதிகளுடன் கூடிய படிக்கட்டுகள் இடம்பெறும். இதில் 15 பாதுகாவலர்கள் வரை பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடலாம். அதன்படி 2026 சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி பிரசார வாகனங்களில் புதிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதுதொடர்பாக தனியார் நிறுவனத்தின் மேற்பார்வையாளர் உசைன் பாட்ஷா கூறியதாவது: வரும் சட்டப்பேரவைத் தேர்தலுக்காக புதிய வாகனங்களில் அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கணினிகள் மற்றும் பிரிண்டர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2 எல்இடி திரை தொலைக்காட்சிகள் பொருத்தப்பட்டு வாகனங்களுக்குள் அமர்ந்து, வெளியில் மக்கள் கூட்டத்தைப் பார்க்க ஏற்பாடு செய்துள்ளோம். வாகனத்தின் வெளிப்பகுதியில் பெரிய திரையும் அமைத்துள்ளோம்.

பெரும்பாலும், தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் பிரசார வாகனங்களைத் தயாரிக்கிறோம். தற்போது வரை சென்னையில் இருந்து பல கட்சிகளிடம் இருந்து ஆர்டர்கள் வந்த வண்ணம் உள்ளன. ஜனவரி மாதத்தில் மட்டும் 7 பிரசார வாகனங்கள் தயாரித்து, சம்பந்தப்பட்ட கட்சியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், 3 வாகனங்களின் தயாரிப்புப் பணி நடைபெற்று வருகிறது. வரும் வாரங்களில் பணி முடிவடைந்து அந்த வாகனங்களும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும். தேர்தல் நெருங்குவதால், பல பிரசார வாகனங்களுக்கு ஆர்டர்கள் வரும் என்று எதிர்பார்க்கிறோம்' என்றார்.

# வளர்ந்த தமிழ்நாடு உருவாக திமுக தடையாக உள்ளது

## பாஜக செய்தித் தொடர்பாளர் சி.ஆர்.கேசவன்



பீளமேட்டில் உள்ள பாஜக அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் தேசிய செய்தித் தொடர்பாளர் சி.ஆர்.கேசவன். உடன், பாஜக மாவட்டத் தலைவர் ரமேஷ்குமார் உள்ளிட்டோர்.

**கோவை, பிப்.10:** வளர்ந்த தமிழ்நாடு உருவாக திமுக தடையாக உள்ளதாக பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் சி.ஆர்.கேசவன் தெரிவித்தார்.

கோவை பீளமேட்டில் உள்ள பாஜக அலுவலகத்தில், அக்கட்சியின் தேசிய செய்தித் தொடர்பாளர் சி.ஆர்.கேசவன் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது: பாஜக அரசு கடந்த 11 ஆண்டுகளில் 26 கோடி மக்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்துள்ளது. மேலும், அரசின் நலத்திட்டங்களில் தவறான பயனாளர்களுக்கு சென்று கொண்டிருந்த சுமார் 10 கோடி பேருக்கான நிதி தடுக்கப்பட்டு, தகுதியான பயனாளர்களுக்கு கொண்டுச் சேர்க்கப்பட்டுள்ளது.

கடந்த 11 ஆண்டுகளில் மத்திய அரசு மூலமாக தமிழகத்துக்கு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ.6.50 லட்சம் கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு மலிவான விலையில் மருந்துகளை மக்களுக்கு வழங்கி வருகிறது. அதற்கு மாறாக திமுக அரசு மலிவான மதுவை மக்களுக்கு வழங்கி வருகிறது. தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் ஏற்பட்டுள்ளது. டிஎன்பிஎஸ்சி தேர்வைக் கூட முறையாக நடத்த முடியாத நிலையில் திமுக அரசு உள்ளது. வளர்ந்த இந்தியா வேண்டுமென்றால், வளர்ந்த தமிழ்நாடு அவசியம். ஆனால், வளர்ந்த தமிழ்நாடு உருவாக திமுக அரசு தடையாக உள்ளது என்றார்.

இப்பேட்டியின்போது, பாஜக மாவட்டத் தலைவர் ரமேஷ்குமார் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# சேரன் மாநகரில் நாளை 'நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாம்

**கோவை, பிப்.10:** கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலம் சேரன் மாநகரில் வியாழக்கிழமை (பிப்ரவரி 12) 'நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து, கோவை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கோவை மாநகராட்சியில் முதல்வரின் 'நலம் காக்கும் ஸ்டாலின்' பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாம், கிழக்கு மண்டலம், 22-ஆவது வார்டுக்கு உள்பட்ட விளாங்குறிச்சி சாலை, சேரன் மாநகர் வி.கே.ஆர். திருமண மண்டபத்தில் பிப்ரவரி 12-ஆம் தேதி (வியாழக்கிழமை) காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற உள்ளது.

இந்த பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமில் கண், பல், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை, பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, சர்க்கரை, இதயம், நுரையீரல் நோய், தோல் சிகிச்சை, நரம்பியல் சிகிச்சை, எலும்பு மருத்துவம், மாற்றுத்திறனாளிகள் மற்றும் இயன்முறை மருத்துவம், ஆயிஷ் மற்றும் சித்த மருத்துவம், மனநல மருத்துவம், குழந்தைகள், மகப்பேறு, புற்று நோய், காசநோய் மருத்துவம் உள்ளிட்ட 18 வகையான சிறப்பு மருத்துவ சிகிச்சைகள் பெறலாம்.

மேலும், இம்முகாமில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அடையாள அட்டை வழங்குதல், மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை வழங்குதல் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான உறுப்பினர் அட்டை வழங்குதல் ஆகிய நிகழ்வுகளும் நடைபெற உள்ளன.

எனவே, தமிழக அரசின் சார்பில் நடைபெறும் நலம் காக்கும் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாமை மக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என அதில தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆர்ப்பாட்டம்...



திமுக ஆட்சியில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை, சட்டம்- ஒழுங்கு சீர்குலைந்துள்ளது எனக் கூறி பாஜக மாநில செயற்குழு உறுப்பினரும், நடிகையுமான கஸ்தூரி தலைமையில் காந்தி பூங்காவில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்திய தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள அதிமுக, பாஜக, அமமுக, பாமக உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த மகளிர்.

# மாவட்டத்தில் 12.41 லட்சம் பேருக்கு குடற்புழு நீக்க மாத்திரை

## 4,392 முகாம்கள் மூலம் வழங்கப்பட்டது



கோவை வெள்ளலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்குகிறார் மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர்.

**கோவை, பிப். 10:** தேசிய குடற்புழு நீக்க நாளையொட்டி கோவை மாவட்டத்தில் 12.41 லட்சம் பயனாளிகளுக்கு 4,392 மையங்கள் மூலம் அல்பெண்டாசோல் எனப்படும் குடற்புழு நீக்க மாத்திரை செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

உலக மக்கள் தொகையில் 24 சதவீதம் பேர் மண் மூலம் பரவும் குடற்புழு தொற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் திறந்த வெளியில் மலம் கழிப்பதால் அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு குடற்புழு தொற்று ஏற்படலாம். தொற்றுடைய மண் மூலம் மண்ணில் விளையும் பொருள்கள் மூலம், மண்ணில் கை கால்கள் படுவதன் மூலம் மனிதர்களுக்கு குடற்புழு தொற்று ஏற்படுகிறது.

இதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு கடந்த 2015 முதல் ஆண்டுக்கு இருமுறை தேசிய குடற்புழு நீக்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. அதன்படி இந்த ஆண்டுக்கான முதல் சுற்று குடற்புழு நீக்க முகாம் கோவை மாவட்டத்தில் உள்ள 1,697 அங்கன்வாடி மையங்கள், 1,070 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், 985 தனியார் பள்ளிகள், 150 கல்லூரிகள், 90 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 328 துணை சுகாதார நிலையங்கள், 72 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் என மொத்தம் 4,392 மையங்கள் மூலம் அல்பெண்டாசோல் குடற்புழு நீக்க மாத்திரை செவ்வாய்க்கிழமை இலவசமாக வழங்கப்பட்டது.

வெள்ளலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பொது சுகாதாரம், நோய்த் தடுப்பு மருந்துத் துறை சார்பில் தேசிய குடற்புழு நீக்க நாளையொட்டி, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட சுகாதார அலுவலர் பாலுசாமி உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர். இதைத் தொடர்ந்து, மாணவ, மாணவிகள் ஆட்சியர் தலைமையில் சுகாதார உறுதிமொழியேற்றனர்.

மாவட்டத்தில் 1 முதல் 19 வயதுக்கு உள்பட்ட 9,71,216 குழந்தைகள், 20 முதல் 30 வயது வரை உள்ள 2,70,355 பெண்கள் என மொத்தம் 12,41,571 பயனாளிகள் பயனடைந்துள்ளனர். குடற்புழு நீக்க மருந்துகளை குழந்தைகளுக்கு வழங்குவதற்கு, 404 கிராம சுகாதார செவிலியர், 160 இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள், 60 ஆஷா பணியாளர்கள், 1,457 அங்கன்வாடி பணியாளர்கள் என மொத்தம் 2,081 பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதில் விடுபட்ட குழந்தைகளுக்கு வரும் 17-ஆம் தேதி மாத்திரை வழங்கப்படும் என்றும் சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தொழில் நிறுவனங்கள் இஎஸ்ஐ பங்களிப்பை மாதந்தோறும் 15-ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும்

## தொழிலாளர் அரசுக் காப்பீட்டுக் கழகம்

**கோவை, பிப். 10:** தொழில் நிறுவனங்கள் தங்களின் இஎஸ்ஐ பங்களிப்புத் தொகையை மாதந்தோறும் 15-ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்று தொழிலாளர் அரசுக் காப்பீட்டுக் கழகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கோவை சார் மண்டல அலுவலகம் கூறியிருப்பதாவது:

தொழிற்சாலைகள், நிறுவனங்கள், அவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களின் பதிவை ஊக்குவிக்கும் திட்டமான (SPREE) 2025, இஎஸ்ஐ சட்டத்தின் கீழ் சமூகப் பாதுகாப்பு காப்பீட்டை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு சிறப்பு முயற்சியாகும். இந்தத் திட்டம் 2025 ஜூலை 1 முதல் ஜனவரி 2026 வரை செயல்பாட்டில் இருந்தது.

கோவை துணை மண்டலத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 3,800 தொழிற்சாலைகள், நிறுவனங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டு, அதில் பணியாற்றும் தொழிலாளர்கள் அரசுக் காப்பீட்டுச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் பதிவு செய்த, புதிய தொழிற்சாலைகள், நிறுவனங்கள், அவற்றில் பணியாற்றும் ஒப்பந்த, தற்காலிக தொழிலாளர்கள் உள்ளிட்ட தங்களது ஊழியர்களை இஎஸ்ஐசி திட்டத்தின் கீழ் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும் இஎஸ்ஐ பங்களிப்பை (நிறுவனங்கள், பணியாளர் பங்களிப்பு) ஒவ்வொரு மாதமும் 15-ஆம் தேதி அல்லது அதற்கு முன்பாக இஎஸ்ஐசி வலைதளத்தில் செலுத்தி, இஎஸ்ஐ திட்டத்தின் பயன்களை தங்களைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு அளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


**TAMIL NADU FISHERIES DEVELOPMENT CORPORATION LIMITED**
(A Government of Tamil Nadu Undertaking)
Integrated Office Complex for Animal Husbandry & Fisheries Department,
No.571, 4th Floor, Anna Salai, Nandanam, Chennai – 600035.
**TENDER NOTICE** Date:09.02.2026

E-Tenders/Online tenders are invited by the Managing Director, TNFDC Ltd., for leasing out of following facilities at Mandapam, Ramanathapuram District:

| Tender Reference No. | Description | EMD Amount (Rs.) | Period of Lease | Date of issue of Tender Schedule | Last date / time for Submission of tender |
|---|---|---|---|---|---|
| 4609/S4/11 | Leasing of Processing-cum-Cold Storage Facilities at Mandapam, Ramanathapuram District. | 65,000/- | 3 years | 13.02.2026 on 11.00 Upto 04.03.2026 | 04.03.2026 up to 3.00PM . |

The Tender documents and other details will be available in the government website http://tntenders.gov.in if any changes/corrections in the tender if will be published in the above government website only.
DIPR/876/TEN/2026 Sd./-MANAGING DIRECTOR

DBS

**ஏல அறிவிப்பு**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் தங்க நகைக் கடன் வாடிக்கையாளர்கள் தங்களுடைய கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறிவிட்டனர் மற்றும் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்பட்ட பல நினைவூட்டல் அறிவிப்புகள், வங்கியில் பதிவு செய்யப்பட்ட அவர்களின் முகவரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
கீழே குறிப்பிட்ட ஏல தேதி அல்லது அதற்கு முன்பாக முழு கடன் தொகையும் செலுத்தப்படாவிட்டால், வாடிக்கையாளர்களின் பிணையங்கள் கீழே குறிப்பிட்ட ஏல தேதி **அன்று காலை 11 மணிக்கு** அல்லது அதற்கு பிறகு வேறு எந்த வசதியான தேதியிலும், மறு அறிவிப்பு இல்லாமல் மற்றும் வங்கியின் முழுமையான விருப்பத்தின் பேரில் வங்கியால் பொது ஏலத்தில், வங்கி வளாகத்தில் அல்லது **https://egold.auctiontiger.net** என்ற மின்-ஏல தளம் மூலம் விற்கப்படும்.

**ஏலத் தேதி : 17.02.2026**

| குறிப்பு# | வாடிக்கையாளர் பெயர் | கிளை பெயர் | மொத்த எடை | நிகர எடை |
|---|---|---|---|---|
| 19135090 | தனபால். D | உப்பிலிபாளையம், கோயம்புத்தூர் | 11.15 | 11.00 |
| 18332981 | இந்திராணி | சித்தோடு | 9.70 | 8.50 |
| 18333500 | வாசு பழனி | சித்தோடு | 42.00 | 42.00 |
| 24132871 | ரமேஷ் குமார் | ஈரோடு | 23.10 | 23.00 |
| 27839050 | கவிதா. C | கோபிசெட்டிபாளையம் | 35.80 | 35.50 |
| 75630627 | சஞ்சய் குமார். M | திண்டல், ஈரோடு | 8.20 | 7.90 |
| 36036108 | P. சிவசாமி | காங்கேயம் | 12.00 | 12.00 |

**ஏலத் தேதி : 10.03.2026**

| குறிப்பு# | வாடிக்கையாளர் பெயர் | கிளை பெயர் | மொத்த எடை | நிகர எடை |
|---|---|---|---|---|
| 54130490 | நபிஷா பேகம். S | பொள்ளாச்சி | 28.00 | 26.50 |
| 54130700 | ருக்மல் ஹக்கீம். M | பொள்ளாச்சி | 23.60 | 20.00 |
| 54130764 | திருமுருகானந்தம் கோவிந்தராசு | பொள்ளாச்சி | 23.70 | 23.00 |
| 65733381 | நுஷிபா. P.M | சித்தாபுதூர், கோயம்புத்தூர் | 299.60 | 275.00 |
| 65733062 | ரதீஷ்ராம். D | சித்தாபுதூர், கோயம்புத்தூர் | 44.80 | 42.80 |
| 18333759 | C. கார்த்திகா | சித்தோடு | 16.10 | 16.10 |
| 18333971 | சங்கீதா | சித்தோடு | 26.30 | 26.20 |
| 18331098 | வேலுசாமி. P | சித்தோடு | 76.40 | 76.30 |
| 24133214 | பிரசாந்த். T | ஈரோடு | 64.90 | 62.40 |

இடம் : சென்னை
நாள் : 09.02.2026
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
DBS வங்கி இந்தியா லிமிடெட்

உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக...
www.dinamani.com






**AMBIKA COTTON MILLS LIMITED**
Regd. Office : 15/9A, Valluvar Street, Sivanandha Colony, Coimbatore - 641 012.
CIN : L17115TZ1988PLC002269
0422-2491504, 2491505 | www.acmills.in | ambika@acmills

**STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER / NINE MONTHS ENDED 31/12/2025**
(Rs. In Lakhs,except per share data)

| Particulars | Quarter Ended 31.12.2025 | Quarter Ended 30.09.2025 | Quarter Ended 31.12.2024 | Nine Months Ended 31.12.2025 | Nine Months Ended 31.12.2024 | Year Ended 31.03.2025 |
|---|---|---|---|---|---|---|
| | Unaudited | Unaudited | Unaudited | Unaudited | Unaudited | Audited |
| 1. Total Income from Operations | 17707 | 20310 | 16257 | 57544 | 58523 | 72858 |
| 2. Operating Profit | 2792 | 3015 | 2876 | 8829 | 9918 | 12983 |
| 3. Finance Cost | 254 | 339 | 347 | 996 | 1289 | 1620 |
| 4. Gross Profit | 2538 | 2676 | 2529 | 7833 | 8629 | 11363 |
| 5. Depreciation | 504 | 515 | 568 | 1507 | 1689 | 2244 |
| 6. Net profit/(Loss) for the period (before tax and exceptional items) | 2034 | 2161 | 1961 | 6326 | 6940 | 9119 |
| 7. Net profit/(Loss) for the period before tax (after exceptional items) | 2034 | 2161 | 1961 | 6326 | 6940 | 9119 |
| 8. Net profit/ (Loss) for the period after tax (after exceptional items) | 1517 | 1594 | 1428 | 4703 | 4988 | 6574 |
| 9. Other Comprehensive Income | 0 | 0 | 0 | 0 | 0 | -54 |
| 10. Total Comprehensive income for the period (Comprising Profit / (Loss) for the period (after tax ) | 1517 | 1594 | 1428 | 4703 | 4988 | 6520 |
| 11. Equity Share Capital | 572.5 | 572.5 | 572.5 | 572.5 | 572.5 | 572.5 |
| 12. Reserves (excluding Revaluation Reserve ) as per Audited Balance Sheet | - | - | - | - | - | 89833 |
| 13. Earnings Per Share (of Rs.10/- each) (for Continuing and discontinued operations) a) Basic | 26.50 | 27.85 | 24.95 | 82.15 | 87.13 | 114.83 |
| b) Diluted | 26.50 | 27.85 | 24.95 | 82.15 | 87.13 | 114.83 |

Note : The above is an extract of the detailed format of Quarter/Nine Months Financial Results ended 31st December, 2025 filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI ( Listing Obligation and Disclosure Requirements) Regulations,2015. The full format of the Unaudited Financial Results for the Quarter/ Nine Months ended 31st December, 2025 are available on the Company's websites www.acmills.in and on the websites of BSE (www.bseindia.com) & NSE (www.nseindia.com)

Place : Coimbatore
Date : 10.02.2026

For Ambika Cotton Mills Limited
S/d
P.V.Chandran,
Chairman & Managing Director
DIN : 00628479